பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை 03.08.2025 கதிர் 267

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியை வெளியிலிருந்து பகையாளிகள் கட்சிகள் ஒழித்துக் கட்டும் முயற்சி ஒருபுறம் என்றால் உள்ளி ருந்தே அதனை ☞ 2

# வடக்கில் 70 பாடசாலைகளை மூடவேண்டிய நிலையுள்ளது

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

கல்விப் பின்புலம் என்பது யாழ்பாணத்துக்குதனித்துவமான காலசாரத்தை கொண்ட விடயமாகும். இருப்பினும் இன்று இங்கு கல்வி பெரும் சவாலுக்கு உட்பட்டுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் 982 பாடசாலைகள் காணப்படும் நிலையில் அவற்றில் 70 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்விச்சீர்திருத்தம்தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் எட்டாவது அமர்வு பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி தலைமையில்நேற்றுசனிக்கிழமை வடக்குமாகாணபிரதமசெயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

### இரவுக் களியாட்ட விடுதிகளில்

# சீனர்களுக்கு போதைப்பொருள் விற்கும் வர்த்தகர் சிக்கினார்

இரவு நேரக் களியாட்ட விடுதிகள் மற்றும் கசினோ விடுதிகளில் சீன பிரஜைகளுக்கு ஐஸ் போதைப்பொருட்களை விற்பனை செய்யும் பிரதான போதைப்பொருள் வர்த்தகரை கொழும்பு தெற்கு குற்றத் தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பம்பலப்பிட்டியில் கைது செய்யப்பட்ட நபர் சீன நாட்டவர் என்றும், அவர் நீண்ட காலமாக நாட்டில் சட்டவிரோதமாக வசித்து வருவதாகவும் ☞ 2

# சமூகத்திலுள்ள அனைத்துமே ஜேவிபி மயமாகி வருகின்றன

### சஜித் பிரேமதாச கூச்சல்

நாட்டில் மிகவும் ஆபத்தான சூழ்நிலையொன்று எழுந்து வருகின்றது. சமூகத்தில் காணப்படும் சகல நிறுவனங்கள், அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் ஜேவிபி மயமாக்கலுக்கு ஆளாகி வருகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இளைஞர் கழங்கள், பிரதேச இளைஞர் சம்மேளனங்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பனவற்றை ஜேவிபியின் அரசியல் ☞ 2

# மொறட்டுவ மாவட்ட நீதிபதி உடனடி பணி இடைநிறுத்தம்

மொரட்டுவை மாவட்ட நீதிபதியாகவும், நீதிவானாகவும் பணியாற்றிய திலின கமகேயின் பணிகளை இடைநிறுத்த நீதிச் சேவை ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவருக்கு எதிராக பொருத்தமற்ற நடவடிக்கை குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் அதன் காரணமாக இந்த இடைறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இது குறித்து நீதிச் சேவை ஆணைக் குழ்வால், குற்றப்பத்திரம்திலினகமகேவுக்குகையளிக்கப்ட்டுள்ள நிலையில் 21நாட்களுக்குளதற்கு பதிலளிக்கக் கோரி ஆணைக் குழு நேற்று முன் தினம் எழுத்துமூலமாக அவருக்கு அறிவித்த்துள்ளது.

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான

# தமிழ் தேசிய பேரவையின் கடிதத்தில் தமிழ் அரசுக் கட்சி கையெழுத்திடாது

### அரசியல் குழுக் கூட்டத்தின் பின் அக் கட்சி அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்புவதற்கென்று தமிழ்த் தேசியப் பேரவையும் சில குடிமைச் சமூக அமைப்புக்களும் சேர்ந்து தயாரித்துள்ள கடிதத்தில் கையெழுத்திடப்போவதில்லை என்று தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ளது.

பதிலாக ஏட்டிக்குப் போட்டியான கடிதம் ஒன்றை அனுப்ப முயற்சிப்பதில்லை என்றும், தேவையேற்பட்டால். பொருத்தமானநேரத்தில்பொருத்தமான கடிதத்தை தயாரிக்கலாம் என்றும் அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது.

தமிழ்த்தேசியமக்கள்முன்னணி உள்ளிட்ட தரப்பினர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதமொன்றை அனுப்பிவைப்பதற்குத் தீர்மானித்து, அதனை அவர்களாகத் தயாரித்துவிட்டு, கையெழுத்துக்கோரி எமது மேசையில் வைத்திருக்கும் கடிதத்தில் ☞ 6

# சுங்கம் மூலம் 7 மாதங்களில் ரூ. 1200 பில்லியன் வருமானம்

சுங்கத்திணைக்களம்7மாதங்களில் 1200 பில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக ஜூலை மாதத்தில் மாத்திரம் 231 பில்லியன் ரூபா அதிகூடிய வருமானம் கிடைத்துள்ளது. அந்த வகையில் இவ்வாண்டு சுங்கத் திணைக்களத்துக்கான வருமான இலக்கை இலகுவாக அடைய முடியும் எனசுங்கபேச்சாளர்சீவலிஅருங்கொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

### ஏற்றுமதிப் பொருளாதார சவாலை எதிர்கொள்ள

# இலங்கை உற்பத்தித்துறையில் புதிய நிலை மாற்றம் அவசியம்

### சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

இலங்கையின் உற்பத்தித்துறை புதிய நிலை மாற்றம் ஒன்றுக்குள் நுழையாமல் ஏற்றுமதிப் பொருளாதாரம் தற்போது முகங்கொடுத்திருக்கும் தீவிர சவாலை வெற்றிகொள்ளமுடியாது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவினால்இலங்கைக்கானதீர்வை வரி20சதவீதமாகக்குறைக்கப்பட்டிருப்பினும், வருங்காலங்களில்இலங்கையிலிருந்து ☞ 2

# செம்மணி தடயப் பொருட்களை அடையாளம் காண உதவுங்கள்

### சிறீதரன் எம்.பி. கோரிக்கை

செம்மணியில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் பின்னணியிலுள்ளஇனப்படுகொலைச்சம்பவங்களை எண்பிப்பதற்கு, அங்கு நடைபெற்று வரும் அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட தடயப்பொருட்கள் உரியவர்களின் உறவினர்களால் அடையாளம் காட்டப்படவேண்டும்எனநாடாளுமன்றஉறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிறீதரன் தெரிவித்துள்ளார்.

செம்மணி சித்துப்பாத்தி இந்துமயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியின் ☞ 2

# அமெரிக்காவுடன் இன்னும் பேச்சுக்கள் முடியவில்லை

வரி தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுக்கள் இன்னும்நிறைவடையவில்லை. அந்தவகையில்மேலும் சில பொருட்களுக்கான வரியை எதிர்காலத்தில் ☞ 2

# மூதூர் மனிதப் புதைகுழிப் பகுதிக்கு நீதிவான் நேற்றுத் திடீரென வருகை

திருகோணமலை சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோரப் பகுதியில் மனித எச்சங்கள்கண்டுபிடிக்கப்பட்டபகுதிக்கு மூதூர் நீதிமன்ற நீதிவான் தஸ்னீம் பௌசான் திடீரென வருகை தந்து குறித்த காணியின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

குறித்த பகுதியில் அகழ்வு மேற்கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக ஓகஸ்ட் 6 திகதி சட்ட மாநாடு ஒன்றிற்கு திகதியிடப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதிக்கு நேற்று திடீரென வருகை தந்த நீதிவான் களநிலமைகளை ஆராய்ந்தார்.

இந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினர் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, ஜூ லை 20 அன்று சிதைந்த மனித மண்டை ஓடு மற்றும் எலும்புப் பகுதிகளைக் கண்டெடுத்தது. இது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஒழித்துக்கட்டும் சதி நடக்கிறதோ என்கிற சந்தேகம் கட்சிக்குள் உள்ளவர்களிடமே ஏற்பட்டுளள்ளது. அது குறித்துத நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த கூ-ட்டத்தில் பேசப்பட்டுள்ளது.

கட்சியின் அரசியல் குழு, நாடாளுமன்றக் குழு, அரசியல் தீர்வு தொடர்பாக ஆராயவென நியமிக்கப்பட்ட குழு ஆகியன நேற்றைய கூட்டத்தில் கூடி ஆராய்ந்தன. பல விடயங்கள் கூட்டத்தில் பேசப்பட்டபோதும் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் அங்கு தெரிவித்த கருத்துத்தான்.

தமிழ் அரசுக் கட்சியே இல்லாமல் போயிருக்கும் கடைசி நேரத்தில் அது தடுக்கப்பட்டிருக்கின்றது. கட்சியின் பதிவை இரத்துச் செய்வது என்று தேர்தல்கள் திணைக்களம் முடிவும் எடுத்துவிட்டது. ஆனால் இறுதித் தருணத்தில் சுதாகரித்துக் கொண்டதால் ஒருவழியாக அந்த ஆபத்தில் இருந்து கட்சியைக் காப்பாற்றியாகிவிட்டது என்று சுமந்திரன் தெரிவித்தார்.

கட்சியின் வருடாந்தக் கணக்கறிக்கையை தேர்தல்கள் திணைக்களத்திற்கு வழங்காமல் விட்டதன் காரணமாகவே கட்சிக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி ஆண்டின் அறிக்கையை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்குள் தேர்தல் திணைக்களத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அப்படிக்கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படாத கட்சிகளின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும். இதுபோன்றே கணக்கறிக்கைசமர்ப்பிக்கப்படாதகாரணத்தால் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியின் பதிவு இரத்துச் செய்யப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சிக்கு மார்ச் 31ஆம் திகதி வரையும் கணக்கறிக்கைய சமர்ப்பிக்கும்படி இருநினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. ஆனால், அவற்றைக் கிடப்பில் போட்டுவிட்டு இருந்துவிட்டார் பொருளாளர். எனினும் மார்ச் மாத இறுதியில் ஒருவழியாக இந்த விவகாரம் கண்டறியப்பட்டு, கட்சியின் கணக்கறிக்கையை கணக்காய்வாளரிடமிருந்து பெறுவதற்கு காலதாமதமாவதால் அவகாசம் தரும்படி தேர்தல் திணைக்களத்திடம் தமிழ் அரசுக் கட்சி கேட்டிருந்தது. அதையேற்றுக்கொண்ட தேர்தல் திணைக்களம், ஜூலை 31 வரை கால அவகாசம் வழங்கி இறுதி எச்சரிக்கைக் கடிதத்தையும் அனுப்பி வைத்தது.

அந்தக் கடிதத்தையும் பெற்றுக்கொண்டு பொருளாளர் வழக்கம் போலவே வாளாவிருந்துவிட்டார். கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கணக்காய்வாளர் அறிக்கைதரவில்லைஎன்கிறஒற்றைவரியோடு இந்த விடயம் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டுவிட்டது. ஜூலை 31காலையில்கூடிய தேர்தல் திணைக்களம், அன்றைய தினத்திற்குள் கணக்கறிக்கை கிடைக்காத காரணத்தால் தமிழ் அரசுக் கட்சியின் பதவியை நீக்குவது என்று முடிவு எடுத்தது.

அப்படிக் கட்சிப் பதிவு நீக்கப்பட்டிருந்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என்று அனைவரது பதவிகளும் பறிபோயிருக்கும். நீதிமன்றத்தை நாடி சட்டப் போராட்டத்தை கட்சியினர் நடத்தியிருப்பார்கள் என்றபோதும் பதிவு நீக்கத்தால் போதியளவிற்கு கட்சிக்குச் சேதாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இந்த நிலையில்தான் கட்சிப் பதிவை நீக்குவது என்ற தேர்தல் திணைக்களத்தின் முடிவைத் தான் அறிந்துகொண்டார் என்றும், திணைக்களம் கட்சிக்கு வழங்கிய கால அவகாசமான ஜூலை 31ஆம் திகதி முடிவடையாத போது எப்படி கட்சிப் பதிவை நீக்கும் முடிவை எடுக்கமுடியும் என்ற சட்ட வாதத்தைத் தான் முன்வைத்தபோது, 31ஆம் திகதிக்கு முன்னர் கணக்கறிக்கை பதிவுத்தபாலில் இடப்பட்டதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் தமது முடிவை மீள்பரிசீலனை செய்யலாம் என்று தேர்தல் ஆணைக்குழு ஓர் இணக்கத்திற்கு வந்தது என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

கட்சியில் கேட்டால் கணக்கறிக்கை வரவில்லைஎன்று இலகுவாக, விட்டேத்தியாகப் பதில் கிடைத்துள்ளது. கணக்காய்வாளர் யார் என்று கேட்டால் அதற்கும் பதிலில்லை. அதையடுத்து உடனடியாகச் செயலில் இறங்கிய செயலாளர் வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சுகிர்தனின் உதவியுடன் கணக்காய்வாளரைத் தேடிப்பிடித்து அவரிடமிருந்து அந்த ஒற்றைப் பக்க கணக்காய்வறிக்கையைப் பெற்று அதனை தேர்தல் திணைக்களத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்திருக்கின்றனர். அதற்கான ஆதாரங்கள் உடனடியாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் அனுப்பி வைத்துள்ளனர். இப்படித்தான் கட்சியின் தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போனது என்கிற விவரத்தை சுமந்திரன் அங்கு எடுத்து விளக்கினார்.

இது கட்சியின் பதிவை நீக்கி இப்போதுள்ள தலைமையைநெருக்கடிக்குள்ளாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட சதி என்றே கூடட்டத்தில் இருந்தவர்கள் பலரும் நம்பத் தலைப்பட்டனர் என்று அறியவந்தது. எல்லாம் அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.

கூடட்டத்தில் நடந்த வேறும் சில விடயங்கள் பற்றி நாளை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## வடக்கில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், கல்வி மறுசீரமைப்பு ஏன் தேவை என்பது தொடர்பில் தெளிவாகக்குறிப்பிட்டுள்ளார். அதில் கல்வியின் நிலைமை, பாடசாலையின் நிலைமை, அவற்றின் மூலம் ஏற்படவுள்ள மாற்றம் என்ன என்பது தொடர்பாகவும் குறிப்பிட்டு கல்வி சீர்திருத்தம் முக்கிய தேவையென தெளிவாக வலியுறுத்தியிருந்தார்.

வறுமை ஒழிப்பு தொடர்பான வேலைத்திட்டத்துக்குகூடுதலான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் வடக்கு மாகாணம் தொடர்பில் விசேடகவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஆளுநர் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் வட மாகாணத்தை விசேடமாக கவனத்தில் கொண்டனர். வட மாகாணமே இலங்கையில் அதிக வறுமைக்கு உட்பட்ட பிரதேசமாக இருக்கிறது.

இலங்கையில் வறுமையான மாவட்டமாக மொனராகலை மாவட்டம் இருந்த நிலையில் தற்போது அது முல்லைத்தீவு மாவட்டமாக மாறியிருக்கிறது.

இதனால் வறுமையுடன் இணைத்து கல்வி தொடர்பான பிரச்சினையையும் அணுக வேண்டியுள்ளது. வறுமையிருக்கும் இடங்களிலெல்லாம் கல்விப் பிரச்சினையும் காணப்படுகிறது. கல்வியில் பின்னடைவைச் சந்தித்துள்ள இடங்களில் வறுமை அதிகரித்துள்ளது.

மேலும் சமூக சீரழிவுகள், குற்றசெயல்கள் அதிகரித்து காணப்படுகிறது. இன்று யாழ் மாவட்டத்திலும் இந்த சவால்கள் காணப்படுகிறது. இந்த சவால்களில் இருந்து மீண்டு புதிய யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது.

இதனால் எமது ஆளும்தரப்பில் கல்விக்கே அதிக முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென்ற கொள்கை பின்பற்றப்படுகின்றது. இதற்கமைவாகவே கல்வி புலத்தை வெளிப்படுத்தி பிரதமர் ஹரிணிக்கு கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாணத்தில் 982 பாடசாலைகள் காணப்படும் நிலையில் அவற்றில் 70க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

10 பிள்ளைகள் கல்வி கற்கும் 35 பாடசாலைகள் காணப்படுவதாகவும் 11 - 20 பிள்ளைகள் கல்விகற்கும் 64 பாடசாலைகளும் 20 -50 பிள்ளைகள் கற்கும் 171 பாடசாலைகள் இருப்பதாகவும் 50 - 100 பிள்ளைகள் கற்கும் 174 பாடசாலைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 40 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் எவ்விதகல்விநடவடிக்கைகளும் முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் எமது கல்வியில் மறுசீரமைப்பு தேவை என்பது உணரப்படுகின்றது. இது தொடர்பில் அனைவரும் புரிதலுடன் செயற்பட்டால் சமூகத்துக்கு நல்ல செய்தியை கொண்டுசெல்லமுடியுமென எதிர்பார்க்கிறேன் எனவும் தெரிவித்தார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது ஆசிய நாடுகளுக்கு மத்தியில் உருவாகக்கூடிய போட்டித்தன்மை தொடர்பில் கவனம்செலுத்தி, நாடு என்ற ரீதியில் ஒருமித்து செயலாற்றி, சவால்களை வெற்றிகொள்ளவேண்டும் எனவும் அது தெரிவித்துள்ளது.

இது குறித்து முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமைத்துவத்தில் இயங்கிவரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் இலங்கைக்கான தீர்வை வரி 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பது நாட்டின் தற்போதைய நிலவரத்தைக்கருத்திற்கொண்டு நோக்குகையில் குறிப்பிடத்தக்களவு நிவாரணமாகக் கருதமுடியும். இருப்பினும் வருங் காலங்களில் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது ஆசிய நாடுகளுக்கு மத்தியில் உருவாகக்கூடிய போட்டித்தன்மை தொடர்பில் கவனம் செலுத்தி, நாடு என்ற ரீதியில் ஒருமித்து இயங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இவ்விடயத்தில் எதிர்வருங்காலங்களில் ஏற்படக்கூடிய சவால்களின்போது ஒருமித்துக் கலந்துரையாடி, தீர்வுக்கான திட்டங்களைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பிடமும், பொருளாதாரத்துடன் தொடர்புடைய கொள்கைகளை வகுக்கும் தரப்பினரிடமும், தனியார்துறையினரிடமும் கேட்டுக்கொள்கிறோம்.

இதன்போது நாம் விடேச அவதானம் செலுத்தவேண்டியபலதுறைகள் இருக்கின்றன. இலங்கையின் உற்பத்தித்துறையானது மிகக் குறைந்தளவிலான செயற்திறனையே கொண்டிருக்கிறது. அதேபோன்று மின்கட்டணம் மிக உயர்வாகக் காணப்படுகிறது. கைத்தொழிற்துறை வலுவிழக்கக்கூடிய நிலையில் உள்ள போதிலும், உலகளாவிய ரீதியில் அதிக எண்ணிக்கையான விடுமுறைகளைக்கொண்ட நாடாக இலங்கை இருக்கிறது.

அதுமாத்திரமன்றி துறைமுகம், பொதுப்போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய துறைகளால் அடிக்கடி முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டங்களினால் நாட்டின் உற்பத்தித்துறை மிகமோசமான சவாலுக்கு முகங்கொடுத்திருக்கிறது. எனவே நாம் எம்முடன் போட்டியிடும் நிலையில் உள்ள ஏனைய ஆசிய நாடுகளின் உற்பத்தி நிலவரம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவேண்டும். அதனை அடிப்படையாகக்கொண்ட புதிய நிலைமாற்றமொன்றுக்குள் பிரவேசிக்காமல், நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரம் தற்போது முகங்கொடுத்திருக்கும் தீவிர சவாலை வெற்றிகொள்ளமுடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## செம்மணி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்வுப்பணிகளில் இதுவரை மீட்கப்பட்டுள்ள தடயப்பொருட்கள் பொதுமக்களால் அடையாளப்படுத்தப்படுமாக இருந்தால், அவற்றை அடிப்படையாகக்கொண்டு உண்மைகளைக் கண்டறிவதற்கான விசாரணைகளைக் கோர முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் விடுக்கப்பட்டுள்ள கட்டளையை மேற்கொள் காட்டி கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

செம்மணியில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் பின்னணியிலுள்ள இனப்படுகொலைச் சம்பவங்களை எண்பிப்பதற்கு, அங்கு நடைபெற்று வரும் அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட தடயப்பொருட்கள் உரியவர்களின் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட வேண்டும்.

ஆகவே, தடயப்பொருட்களை இனங்காட்ட வேண்டியதன் அவசியம் உணர்ந்து, தங்களின் உறவுகளும் செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், எதிர்வரும் 2025.08.05 ஆம் திகதி மாலை 1.30 மணி முதல் 5.00 மணிவரை யாழ்ப்பாணம் சித்துப்பாத்தி இந்துமயானத்தருகில் காட்சிப்படுத்தப்படும் தடயப்பொருட்களை அடையாளம் காட்ட வருகைதந்து, இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணைக்கான கோரிக்கைக்கு வலுச்சேர்க்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

## சுங்கம் மூலம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

2025 ஒகஸ்ட் முதலாம் திகதி வரை 1227 பில்லியன் ரூபா வருமானத்தை இலங்கை சுங்க திணைக்களம் பெற்றுள்ளது. ஜூலை மாதம் வரலாற்றில் முதன் முறையாக ஒரே மாதத்தில் அதிக வருமானமாக 231 பில்லியன் ரூபா சுங்கத் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரே மாதத்தில் இவ்வாறு அதிகூடிய வருமானம் கிடைக்கப் பெற்றதில்லை. இவ்வாண்டு எமது வருமான இலக்கு 2115 பில்லியன் ரூபாவாகும்.

அந்த இலக்கில் தற்போது 1227 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஜூலை 31 வரை எட்டப்பட வேண்டிய இலக்கைவிட 116 பில்லியன் ரூபா அதிக வருமானம் கிடைத்துள்ளது. அந்த வகையில் விரைவாக எமது இலக்கை அடைய முடியும் என்று நம்புகின்றோம். வாகன இறக்குமதியூடாகவே அதிக வருமானம் கிடைத்துள்ளது. அதற்கூடாக 300 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

28 000க்கும் அதிக வாகனங்கள் இதுவரையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதே நிலமை தொடர்ந்தும் காணப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு அப்பால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனமொன்று மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இறக்குமதி கட்டுப்பாட்டு சட்டத்துக்கமையவே அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இறக்குமதிசெய்யப்படும் கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்படும் தாமதத்துக்குசுங்கத்திணைக்களம் மாத்திரமே காரணமல்ல. ஏனைய நிறுவனங்கள், திணைக்களங்களின் பங்களிப்பும் அதில் உள்ளது. எனவே அனைத்து தரப்பினரும் இணைந்து முறையாக செயற்படும் பட்சத்தில் கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்படக் கூடிய தாமதத்தை தவிர்த்துக் கொள்ளலாம் என்றார்.

## போதைப்பொருட்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

சீன நாட்டினருக்கு ஐஸ் போதைப்பொருட்களை விற்பனை செய்யும் ஒரு மோசடி தொடர்பாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து, கொழும்பு தெற்கு குற்றத் தடுப்பு பிரிவினர் நடத்திய விசாரணையைத் தொடர்ந்து இந்த கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டபோது சந்தேக நபரிடம் இருந்து 50 கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

மாலைத்தீவு மற்றும் இலங்கையரிடமிருந்து போதைப்பொருட்களை பெற்று, இரவுநேர களியாட்ட விடுதிகள் மற்றும் கசினோ விடுதிகளுக்கு செல்லும் சீன நாட்டினருக்கு விற்பனைசெய்துவந்துள்ளதாகசந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த சீனபிரஜை, தற்போது வரை சட்டவிரோதமாக நாட்டில் தங்கி இருப்பதாகவும் சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சமூகத்திலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பாவைகளாக மாற்ற பல உபாய ரீதியிலானசெயல்முறைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு தமது நெருங்கியவர்களை நியமித்து ஜேவிபியின் அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியமக்கள்சக்தியின் இரத்தினபுரிமாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்து

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஆளும்தரப்பின் புதிய கல்விச் சீர்திருத்தம் கூட்டாகச் செய்யப்படவேண்டிய பொறுப்பு

## யாழ்ப்பாணத்தில் பிரதமர் ஹரினி தெரிவிப்பு

புதிய கல்வி சீர்திருத்தம் கல்வி அமைச்சின் அல்லது ஜனாதிபதி அனுரவின் அல்லது பிரதமர் ஹரிணியின் சீர்திருத்தம் அல்ல, மாறாக அனைவரின் புரிதல், யோசனைகள் மற்றும் பரிந்துரைகளுடன் நேர்மறையான மாற்றங்களைச் செய்வதன் மூலம் குழந்தைகளுக்கு கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு பொறுப்பு என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

புதிய கல்வி சீர்திருத்தம் குறித்து வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்துவதற்காக நேற்று வடக்கு மாகாண செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய கல்வி சீர்திருத்தத்தில், ஒரு மாகாணம், மாவட்டம் அல்லது பிராந்தியம் மட்டுமல்ல, ஒவ்வொரு மாகாணம், மாவட்டம் மற்றும் பிராந்தியமும் முக்கியமானது. சமத்துவம் அங்கிருந்து தொடங்குகிறது. நம் நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சம வாய்ப்புகளை வழங்க விரும்பினால், அனைத்து வளங்களையும் ஒரு பிராந்தியத்திற்கு, ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்க முடியாது. அது நியாயமாக விநியோகிக்கப்பட வேண்டும்.

அங்கு, கடினமான மற்றும் வளம் குறைவாக உள்ள பகுதிகளுக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். கடினமான பாடசாலைகளுக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தீர்வுகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அனைத்து



பாடசாலைகளிலும் டிஜிட்டல் வசதிகள், கற்றல் வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், சுகாதார வசதிகள், தண்ணீர், விளையாட்டு மைதானங்கள், ஆய்வகங்கள், புதுமை இடங்கள் மற்றும் அழகியல் அலகுகள் வழங்கப்பட வேண்டும்.

அதற்கான நல்ல திட்டம் எங்களிடம் உள்ளது. அதற்காக, இந்த பொது விவாதத்தை நாங்கள் நடத்துகிறோம். ஏனெனில் இது கல்வி அமைச்சகம் அல்லது ஹரிணி அமரசூரிய அல்லது ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் சீர்திருத்தம் அல்ல. இது இலங்கையில் தேசிய கல்வியின் சீர்திருத்தம். நாம் அனைவரும் இதைப் பற்றி ஒரு யோசனை பெற வேண்டும். நாம் அனைவரும் இதில் ஈடுபட வேண்டும்.

கல்வி சீர்திருத்தம் பற்றிய உரையாடலை உருவாக்குங்கள். ஆசிரியர் சங்கங்களுடனும், நிபுணர்களுடனும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனும் நாங்கள் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம். நாங்கள் தொடர்ந்தும் அவ்வாறு செய்வோம்.

பெற்றோர்கள் உட்பட சமூகத்தின் அனைத்துத் துறையினரும் இதில் ஈடுபட வேண்டும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வரிச் சலுகைகளுக்குப் பின்னாலான ஒப்பந்தங்களும் வெளிப்படட்டும்

**அமெரிக்கா, இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு விதித்திருந்த 44% வரியை தற்போது 20% ஆகக் குறைத்துள்ளது என்பது பொருளாதார ரீதியாக இலங்கைக்கு முக்கிய வெற்றியாகவே கருதப்படலாம். இந்தத் தீர்மானம், இலங்கை ஏற்கனவே சந்தித்துவந்த உள்நாட்டு நெருக்கடிகளை தாண்டி, ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கும் வாய்ப்பை அளிக்கிறது. குறிப்பாக ஆசியப் பசுபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் போட்டியிடுவதற்கான வினைத்திறனை இலங்கை இப்போது தக்க வைத்திருக்கின்றது.**

**இந்த வரிக் குறைப்பு, பார்ப்பதற்கே நன்மையானதாக இருப்பினும், அதன் பின்னாலுள்ள உண்மைகள் குறித்து மக்கள் சந்தேகத்துடன் காணப்படுவது இயல்பே. ஏனெனில் இந்தத் தீர்மானம் ஒருபுறம் வரிச்சலுகை போல தோன்றினாலும், மறுபுறம் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் வேறு துறைகளில் உள்ள விடயங்களைப் பற்றிய ஒரு மாறுபாடான இணக்கப்பாடுகளையும் உள்ளடக்கக் கூடும் என்ற அச்சமும் நிலவுகின்றது.**

**இவ்வகை வரிச் சலுகைகள் பெரும்பாலும் பன்முக உடன்படிக்கைகள், வணிக மற்றும் பாதுகாப்பு சார்ந்த ஒப்பந்தங்களின் பின்னணியில் உருவாகின்றன. அமெரிக்கா, ஆசியப் பிராந்தியத்தில் தனக்கான தோழர்களை அடையாளம் காணும் முயற்சியின் ஒரு பகுதியாக, இலங்கையுடன் இவ்வகை ஒத்துழைப்பை விரிவுபடுத்தி வருகிறது. இதற்குப் பின்னால் உள்ள காரணங்கள் வெளிப்படையானவை: இந்தியப் பெருங்கடலின் முக்கிய இடத்தில் அமைந்துள்ள இலங்கையின் புவியியல் பண்பும், அதன் மூலம் அடையக்கூடிய மூலவளங்களும் அமெரிக்காவின் கவனத்தைக் கவர்ந்துள்ளன.**

**அவ்வாறு இருக்கையில், வரிச் சலுகைக்காக இலங்கை விட்டுக்கொடுத்திருக்கும் விடயங்கள் என்ன என்பதற்கான விளக்கங்களை ஆளும்தரப்பு மக்களுக்கு வழங்க வேண்டியது அவசியம். பாதுகாப்பு ஒப்பந்தங்கள், கடல்சார் உளவுத்துறை ஒத்துழைப்புகள், ஹம்பாந்தோட்டை மற்றும் திரிகொணமலை போன்ற முக்கிய துறைமுகங்கள் தொடர்பான அனுமதிகள் என எது தொடர்பிலும் அமெரிக்காவுடன் இணக்கங்கள் எட்டப்பட்டிருந்தால் அவற்றை மறைத்து வைத்தல் ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரானதாகும்.**

**இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் இரகசியமாகவே வைக்கப்பட்டிருப்பதை மக்கள் இன்னும் மறக்கவில்லை. அதேபோன்று அமெரிக்காவுடனும் எந்தவிதமான இரகசிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவோ, அவை இலங்கையைப் பாதிக்கக்கூடியவையோ என்பதைக் கண்டறிவது மக்களின் உரிமையாகும்.**

**ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சில அரசியல் கட்சிகள், இந்தப் பின்னணிகளை வெளிக்கொணர ஆளும்தரப்பிடம் வலியுறுத்தி வருகின்றன. இலங்கை மக்களின் பாதுகாப்பும், பொருளாதார சுதந்திரமும், வெளிநாட்டுத் தலையீட்டிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய தன்னாட்சி உரிமையும் பறிக்கப்படாத வகையில் எல்லா அரச நடவடிக்கைகளும் வெளிப்படையாகவே இருக்க வேண்டியது கட்டாயம்.**

**அதனால், வரிச் சலுகைகளை வெறும் வெற்றியென்று கொண்டாடுவது போதுமானதல்ல. அதன் கீழ் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள், விட்டுக்கொடுப்புக்கள், மேலும் வெளிநாட்டுகளுக்கு வழங்கப்படும் அனுமதிகள் அனைத்தும் நாட்டு மக்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். பத்திரிகைகள், பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் சட்ட நிலைத்தன்மைகள் மூலமாக இவை நன்கு விவாதிக்கப்பட்டு, பொதுமக்களின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்பட வேண்டும்.**

**இதேபோன்ற பொது நலக் குறித்த விடயங்களில் இரகசியங்களை பேணுதல், எதிர்காலத்தில் இலங்கைக்கு அபாயங்களை உருவாக்கும் என்பதையும், இந்த வரிச் சலுகைக்கான நிகர செலவுகள் என்ன என்பதையும் தற்போது கடுமையாக ஆய்வு செய்யும் தருணமாக இது இருக்கவேண்டும்.**

# அம்பலாந்தோட்டையில் ஒருவர் சுட்டுக்கொலை

அம்பலாந்தோட்டை ஹுங்கம பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டனியாய, பிங்கம பிரதேசத்தில் இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச்சூட்டை நடத்திய சந்தேகநபர் ஹுங்கம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் போது உயிரிழந்த நபர் 32 வயதுடைய பிட்டனிய, பிங்கம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சந்தேகநபர் துப்பாக்கிச்சூட்டை நடத்திய பின்னர் துப்பாக்கியுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். தனிப்பட்ட தகறாரு காரணமாகவே தான் துப்பாக்கிச்சூட்டை நடத்தியதாகவும் அவர் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார்.

போர 12 ரக துப்பாக்கியே சந்தேகநபரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் போது கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் 41 வயதுடைய பிங்கம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். உயிரிழந்த நபரின் சடலம் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஹுங்கம பொலிஸார் முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை முறை கிராமங்களுக்கும் செல்லவேண்டும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

வங்கிகளும் நிதி நிறுவனங்களும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பது போல, கிராமங்களில் உள்ள மக்களுக்கு பொருத்தமான உள்கட்டமைப்பு வசதிகளை எடுத்துச் செல்ல வேண்டும் என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவி த்தார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே மத்திய வங்கி ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட டிஜிட்டல் பரிவர்த்தனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் நேற்று (1) தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தை மையப்படுத்தி மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

'டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் குறிப்பாக நமது நாட்டில் பணம் செலுத்துதல் மற்றும் தீர்வுகளுக்கு பெரும்பாலும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் கடந்த காலங்களில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நுஐயிஷ்ஐள யழிஐவஷ்ஐஆ, ஞயூ ளீலி-ள ஆகியவற்றை பயன்படுத்தி செலுத்தி வந்த நிலையில், தற்போது ஆளும்தரப்பின் சேவைகளுக்கான கொடுப்பனவுகளை றூலிஸணேழிதீ ஊடாகவும் செலுத்த முடிகிறது.

இதே முறையில் வரி செலுத்தவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இதன் பயன்பாடு மிகக் குறைவு. குறிப்பாக மேல் மாகாணத்திற்கு வெளியே செல்லும்போது, பெரும்பாலானவர்கள் இன்னும் நாணயத்தாள்களை கொண்டே பரிவர்தனைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதைத்தான் அவர்கள் எளிது என நினைக்கின்றனர். ஆனால் நீங்கள் உண்மையிலேயே யோசித்துப் பார்த்தால், ஒரு வர்த்தகர் மற்றும் நுகர்வோருக்கு, இந்தப் பணத்தைப் பயன்படுத்துவது உண்மையில் கூடுதல் நேரத்தை கடத்துகிறது.

குறிப்பாக டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் வங்கி அமைப்பு மற்றும் நிதி நிறுவனங்கள் சிறப்புப் பங்காற்றுகின்றன. இது போன்ற இடங்களுக்கு வந்து அதை ஊக்குவிப்பதைத் தவிர, இது கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். அப்போதுதான் இதில் நம்பிக்கை ஏற்படும். இதன் மூலமாக வரி பிரச்சினையில் சிக்கிக்கொள்வோம் என்ற தேவையற்ற பயம் உள்ளது. அப்படி எதுவும் இல்லை. வரி பிரச்சினையில் சிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால் பணத்தை எவ்வாறு கையாண்டாலும் அதில் சிக்கிக் கொள்வீர்கள்' - என்றார்.

# பிரபல குணச்சித்திர நடிகர் மதன் பாப் காலமானார்



சென்னை அடையாறில் உள்ள இல்லத்தில் தனது 71ஆவது வயதில் அவர் காலமானதாக தெரிவிக்கப்படுகிறது.

குணச்சித்திர வேடங்களில் நடித்த நடிகர் மதன் பாப், தனது தனித்துவமான சிரிப்பால், ரசிகர்களைக் கவர்ந்தவர் . இசையமைப்பாளராகத் திரை வாழ்க்கையைத் தொடங்கிய மதன் பாப், பின்னாளில், குணச்சித்திர நடிப்பில் முத்திரைப் பதித்தவர் இந்நிலையில் சென்னை அடையாறில் உள்ள இல்லத்தில், உடல் நலக்குறைவால், நடிகர் மதன் பாப் காலமானார். மதன் பாப்பின் இயற்பெயர் கிருஷ்ணமூர்த்தி இவருக்கு சுசிலா என்ற மனைவியும், ஜனனி என்ற மகளும், அர்ஷித் என்ற மகனும் உள்ளனர்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த மதன் பாப், அதற்காக சிகிச்சை பெற்று மீண்டதாக கூறப்படும் நிலையில், நேற்று மாலை 5 மணியளவில் காலமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மதன் பாப்பின் உடல், சென்னை அடையாறில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

## சமூகத்திலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச வைத்தியசாலை குழுக்கள் கூட தற்போது ஜேவிபி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் அரசியல் தலையீட்டுக்கு உள்ளாகி வருகின்றன. எதிர்காலத்தில், ஜனநாயகத்தை ஒருபுறம் தூக்கி வீசிவிட்டு கிராமிய அபிவிருத்திச் சங்கம், சமூக அபிவிருத்திச் சங்கம், மகளிர் சங்கங்கள், மரண சங்கங்கள், ஓய்வூதியதாரர் சங்கங்கள் போன்றவற்றில் பதவிகளை மக்கள் விடுதலை முன்னனணியினர் பகிர்ந்து கொள்வர்.

விவசாயிகள் சங்கங்கள், மீனவர்கள் சங்கங்கள், தேயிலை சங்கங்கள், ரப்பர் சங்கங்கள், ஏற்றுமதி பயிர்ச் செய்கைகளில் ஈடுபவோர்களின் சங்கங்கள் என இது வியாபித்து, விகாரைகளில் விகாராதிபதிகளாக யார் இருக்க வேண்டும் என்பதையும் இந்த மக்கள் விடுதலை முன்னனணியினரே தீர்மானிக்கும் நிலை ஏற்படுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளன. இந்தப் போக்கு இன்றளவில் அதிகரித்து வருகிறது.

கட்சி, இனம், மதம், வர்க்க வேறுபாடுகள் இல்லாமல் மக்களால் உருவாக்கப்பட்ட இத்தகைய தன்னார்வ அமைப்புகளில் அரசாங்கம் தலையீட்டை செய்து வருகிறது. இந்த சவால்களை எதிர்கொள்ள அடிமட்டத்தில் மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் மாத்திரமே இதனை சமாளிக்க முடியும் என அவர்,மேலும் தெரிவித்தார்.

## தமிழ் தேசிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையெழுத்திடுவதில்லை என்று நாம் தீர்மானித்திருக்கிறோம் என்று இலங்கைத் தமிழ்அரசுக்கட்சியின்பதில்பொதுச்செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழு, அரசியல்தீர்வு விடயங்களைக் கையாள்வதற்கானகுழுமற்றும்நாடாளுமன்றக் குழு ஆகியவற்றின் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பொதுச்செயலாளர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், ரவிகரன், ஸ்ரீநேசன், சிறிநாத், கோடீஸ்வரன், சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கலையரசன்,கிழக்குமாகாணசபை முன்னாள் அமைச்சர் துரைராஜசிங்கம், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் சயந்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தின் நிறைவில் செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களின் பின்னர் கட்சியின் உயர்மட்டக் கூட்டங்கள் இன்னமும் சீராக நடத்தப்படாத நிலையில், கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை நடத்துவதற்கு முன்னதாக உடனடியாகக் கையாளப்படவேண்டிய சில விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இன்றைய தினம் (நேற்று) கட்சியின் அரசியல் குழுவும், அரசியல் தீர்வு விவகாரம் குறித்து ஆராய்வதற்கான குழுவும், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்திக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. எமது கட்சி வட, கிழக்கு மாகாணங்களில் 58 உள்ளூராட்சிமன்றங்களில் போட்டியிட்டது. அவற்றில் 10 - 12 சபைகளில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இல்லை. எனவே தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் உள்ள சுமார் 45 சபைகளில் 32 சபைகளில் எமது கட்சி நிர்வாகங்களை அமைத்திருக்கிறது. நாடளாவியரீதியில் ஆளும் தரப்பான தேசிய மக்கள் சக்திக்கு அடுத்ததாக அதிகூடிய சபைகளில் நிர்வாகங்களை அமைத்த கட்சியாக தமிழ் அரசுக்கட்சியே இருக்கிறது.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாகப் போட்டியிட்டுப்பெற்ற ஆசனங்களைவிட, இம்முறை தமிழ் அரசுக் கட்சி அதிக எண்ணிக்கையான ஆசனங்களை வென்றிருக்கிறது. அதேவேளை சில சபைகளில் எமது கட்சி பின்னடைந்திருக்கிறது.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் எந்தவொரு சபையிலும் தமிழரசுக்கட்சி நிர்வாகம் அமைக்கவில்லை. யாழ்ப்பாணம் வலி வடக்கில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் விளைவாக எம்மால் நிர்வாகத்தை அமைக்கமுடியாமல் கைநழுவிப்போயிருக்கிறது.

அதன்படி இந்த உள்ளூராட்சிமன்ற நிர்வாகத்தில் எமது கட்சிக்குப் பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து எமது கட்சியின் சார்பில் சபைகளுக்குப் பொறுப்பாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்போர், உள்ளூராட்சிமன்றத்தேர்தலில்போட்டியிட்டோர் உள்ளிட்ட சகலருக்கும் மக்களுக்கான சேவை வழங்கல் தொடர்பான தெளிவூட்டல்களை வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கிறோம்.

அதேபோன்று அரசியல் தீர்வு விடயத்தில் மாகாண சபைத் தேர்தல் குறித்துக் கலந்துரையாடினோம். புதிய அரசமைப்பு உருவாக்கம், மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துதல் என்பன தொடர்பில் எமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்போம். குறிப்பாக புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். அதுவரை மாகாண சபைகள் இயங்கவேண்டும். எனவே தற்போது சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் தொடர்பான தனிநபர் பிரேரணையை உடனடியாக நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அழுத்தம் வழங்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற விடயத்தையும் தொடர்ந்து வலியுறுத்துவதுடன், தொடக்கத்தில் அச்சட்டத்தை முற்றாக நீக்குவதாகவாக்குறுதியளித்துவிட்டு, தற்போது அதற்கு மாற்றீடாகப் பிறிதொரு சட்டத்தைக் கொண்டுவருவது குறித்து ஆளும்தரப்பு பேசிவருவதை முழுமையாக எதிர்க்கிறோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக எந்தவொரு சட்டமும் தேவையில்லை.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் கொண்டுவரப்படல், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் என்பன பற்றியும் இக்கூட்டத்தில் கலந்துரையாடினோம்.

இவ்விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குக் கடிதமொன்றை அனுப்பிவைப்பது குறித்து தமிழ்த்தேசியமக்கள்முன்னணிஅண்மையில் தீர்மானம் மேற்கொண்டது, அதில் சில சிவில் அமைப்புக்களும் இணைந்திருந்தன. நாம் அந்தக் கூட்டத்தில் பங்கொள்ளவில்லை.

அந்தக் கூட்டத்தில் அவர்கள் ஐ.நாவுக்கு அனுப்பிவைப்பதற்கான கடிதமொன்றைத் தயாரித்திருக்கிறார்கள். அதனைதலைவருக்கும், எனக்கும் அனுப்பிவைத்தார்கள். அதுபற்றிச் சகலருடனும்கலந்துரையாடித்தீர்மானிப்பதாகக் கூறிய பின்னரும், அவர்கள் அக்கடிதத்தை எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அனுப்பி, அவர்களது கையொப்பத்தைக் கோரியிருக்கிறார்கள். இருப்பினும் இவ்விடயத்தில்கட்சித்தீர்மானத்தின்பிரகாரமே செயற்படமுடியும் என்றும், தனியாகக் கையொப்பம் இடமுடியாது என்றும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பிலும் இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் பேசினோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்கள் தொடர்பில் எவ்வாறான தீர்மானங்கள் கொண்டுவரப்படவேண்டும், என்ன செய்யவேண்டும் என்பது பற்றி நாம் பலமுறை அவர்களுக்குக் கூறியிருக்கிறோம். அதன்படி அவர்களிடம் என்ன விடயங்களைச் சொல்லவேண்டும், அதனை எப்படிச் சொல்லவேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடியிருக்கிறோம்.

எனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தரப்பினர் அவர்களாகத் தயாரித்துவிட்டுஎமதுமேசையில்வைத்திருக்கும் கடிதத்தில் நாம் கையெழுத்திடுவதில்லை எனத் தீர்மானித்திருக்கிறோம். மாறாக நாங்கள் அதனைவிடத் தீர்க்கமாகப் பல்வேறு விடயங்களைஆராய்ந்து, உரியவிடயங்களை, சரியானதருணத்தில், ஏதேனுமொருவிதத்தில் வெளிப்படுத்துவோம் என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2025இல் வெளியிடப்பெற்றது